1974 ஏப்ரல் 15]

திருப்பூர் நகராட்சி உயர்நிலைப்பள்ளிகள்.

826 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகராட்சி மன்றம் தன் நிர்வாகத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளை அரசு ஏற்று நடத்த வேண்டும் என வேண்டியுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். நிதிநிலையின் காரண மாக ஒவ்வோராண்டும் ஒரு சில நகராட்சிப் பள்ளிகளைத்தான் அரசு ஏற்றுக் கொள்ள இயலும். திருப்பூர் நகராட்சியின் கோரிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது அரசின் ஆய்வில் உள்ளது என்று கூறினுர்கள். திருப்பூர் நகராட்சி 5 உயர்நிலைப்பள்ளிகளை நிர்வகிக்கின்ற பொறுப்பில் இருக்கிறது. இதனுல் நகராட்சிக்குக் கூடுதல் செலவு ஏற்படுவதால் இந்த ஆண்டு நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேற்கொள்ளும் பொழுது திருப்பூர் நகராட்சியின் நிர்வாகத்திலுள்ள இரண்டு மூன்று உயர்நிலைப் பள்ளைகளை யாவது எடுப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நகராட்சி பள்ளிகளை அரசு ஏற்றுக்கொள்கின்ற வகையில் எந்த நகராட்சியினுடைய நிதி நிலைமை மிகமிக மோசமாக இருக்கிறது என்று பார்த்து அந்த அடிப்படை யிலேதான் அந்த நகராட்சிப் பள்ளிகளை எடுப்பது என்று அரசாங்கம் முடிவு செய்கிறது. ஏற்கனவே 10 பள்ளிகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 10 பள்ளிகளை எடுப்பதற்குத் திட்ட மிட்டிருக்கிறது. அந்த பத்து பள்ளிகளை எடுக்கின்ற நேரத்தில் எந்தெந்த நகராட்சிகள் மிக மிக மோசமான நிதி நிலையில் இருக்கின்ற்றன என்பதைக் கண்டறிந்து அந்த நகராட்சியிலுள்ள பள்ளிகளை எடுக்க வேண்டும். ஆகவே கோரிக்கைகளை விட்டிருக்கின்ற எல்லா நகராட்சிகளையும் பற்றிப் பரிசீலித்து முடிவெடுக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த அளவில் திருப்பூர் நகராட்சி எந்த நிலையில் வருகிறது என்பதை ஆய்வுக்குப் பிறகுதான் முடிவெடுக்க வேண்டும்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, வரவிருக்கும் ஆண்டில் நகராட்சிகள் உயர்நிலைப் பள்ளிகளைத் துவக்கக்கூடாது என்று ஏதாவது அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, துவங்கக் கூடாது என்பது அல்ல, ஆனால் பெரும்பாலான நகராட்சிகளில் போதுமான அளவில் நகராட்சிப் பணிகளைச் செய்வதற்கு நிதி வசதி இல்லாததால் புதிய உயர்நிலைப் பள்ளிகளைத் துவங்க வேண்டாமென்ற கருத்தை உள்ளாட்சித் துறை மேற்கொண்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலில் பத்து பள்ளிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளப் போவதாகக் கூறினார்கள். மிகமிக மோசமான நிதி வசதி கொண்ட சிங்காநல்லூர் நகராட்சியின் பள்ளி இந்த பத்து பள்ளிகளில் வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய விவரக்குறிப்பு இல்லை. கிட்டத்தட்ட 126 பள்ளிகளுக்கு மேல் நகராட்சிமன்றங்கள் நடத்தி வருகின்றன. இதுவரையில் 10 உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கத்தில் எடுத்திருக்கிறோம். அடுத்து 10 உயர்நிலைப் பள்ளிகளை மேற்கொள்ளுவதற்கு உத்தேசித்திருக்கிறோம். மிகவும் மோசமான அளவில் நிதிநிலை உள்ள நகராட்சிகளிலுள்ள பள்ளிகளை எடுக்க வேண்டும். அந்த வகையில் சிங்காநல்லூர் அடங்கினால் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அது பற்றிய விவரக்குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் ஆய்வுக் குறிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா என்ற அந்த நிலைமைகளை ஆராயலாம்.

Education for linguistic minorities in Kanyakumari

* 827 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether provision has been made for imparting education to the students belonging to the minority language groups in their mother tongue in Kanyakumari district?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. என். டென்னிஸ் : சார், கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறுபான்மை மொழியினர் கல்வி கற்பதற்குப் போதிய வகுப்புகள் இல்லாத நிலைமை இருக்கிறது. புதிய ஆசிரியர்களும் நியமிக்கப்படுகின்ற நிலைமை இல்லை. சிறுபான்மை மொழியினர் பயிற்சி பெறுவதற்காக இருந்த பயிற்சிப் பள்ளியும் விளவங்கோட்டிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்குவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?